**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**<u>O.S.No. 751/2022</u>**

**வா.சா.1. ஈஸ்வரி** 18.10.2022

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1,2 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது மருமகள் இடையன்வலசில் தனியாக வசித்து வருகிறார் .3ம் பிரதிவாதியான எனது மகனும், எனது மருமகளும் ஒன்றாகத்தான் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான் . இளவர் வாதிகள் 1ம் பிரதிவாதி மற்றும் எனது மருமகளுடன் தான்இருந்து வருகிறார் என்றால் சரிதான் . இளவர் வாதிகளுக்கு அவரது தாயார் இளவர் காப்பாராக இருந்து வருவதில் என்னை வைத்து வழக்கை தாக்கல் செய்வதற்கு என்ன காரணம் என்றால் எனது மருமகள் 1ம் பிரதிவாதிக்கு பயந்து கொண்டு வழக்கை தாக்கல் செய்ய முன்வரவில்லை. அதனால் இளவர்களுக்காக அடுத்த நபர் என்ற முறையில் நான் வழக்கை தாக்கல் செய்கிறேன் . நானும் எனது மருமகளும் நல்லமுறையில் இல்லை .எனக்கும் மருமகளுக்கும் இடையே என்ன விரோதம் இருந்து வருகிறது என்பதை பிரமாணபத்திரிக்கையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான் .இளவர் வாதிகளின் இயற்கை காப்பாளர் அவர் தாயார் இருககும்போது சொத்தில் உரிமை இருந்து இருந்தால் அவரே இளவருக்காக வழக்கு தாக்கல்செய்து இருப்பார் என்றும் இளவர்களுக்கு தாவா சொத்தில் உரிமையில்லாததால்தான் இயற்கை காப்பாளாரன அவர்களது தாயார் வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சாயல்ல. தாவா சொத்து பூர்வீகத்திவந்த சொத்து. இந்த வழக்கை தாக்கல்செய்வதற்கு முன்பு வரை எனது மகன் என்னை பராமரித்து எனக்கு தேவையான வசதிகளை செய்து வந்தார் என்றால் தவறு . எனக்கு பெயருக்கு நிறைய விவசாய நிலங்கள் சொந்தமாக உள்ளது என்றால் தவறு. தாவா சொத்துக்களில் எனது பெயரில் பட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான் .நான் தாவா சொத்தை விவசாயம் செய்து வருகிறேன் என்பதை நிரூபணம் செய்வதற்கு அடங்கல் கணக்கை நகல் பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை . எனது மகனிடம் நான் அடிக்கடி பணம் கேட்டு தொந்தரவு செய்து வந்தேன் என்றும், 1ம்பிரதிவாதி பணம் கொடுக்க மறுத்த காரணத்தினால் அவர் மீது விரோதம் கொண்டு மைனர்களை முன்நிறுத்தை இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் தவறு .3ம்பிரதிவாதி கலியுகவர்தன் ராமசாமி மற்றும் கணேசனுக்கு விற்பனை செய்த ஆவணங்களான வா .சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 விற்பனை செய்தது தொடர்பாக வா.சா.ஆ.13 ஆவணமாக

குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை . வா.சா.ஆ.13 ஆவணம் வழக்குக்கு தொடர்புடைய ஆவணம் தான் . வா.சா.ஆ.13 ஆவணம் 17.08.2019 ல் என்னால் பெறப்பட்ட தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான் . வா.சா.ஆ.4 மற்றும் வா .சா.ஆ.5 ஆவணங்கள் 08.05.2008, 31.07.2008 தேதிகளில் ஏற்பட்டது என்றும் ஆனால் தற்போதுள்ள வழிகாட்டு மதிப்பு பெற்று வா .சா.ஆ.13 ஆவணமாக தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல .நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.13 ஆவணத்திற்கு முன்பு நான்கு முறை சொத்தின் மதிப்புகள் அரசால் உயர்த்தப்பட்டுள்ளது என்றும் அதிக பணம் எனது வங்கி கணக்கில் வந்துள்ளது என்பதை காட்டுவதற்காக நான் வா .சா.ஆ.13 ஆவணத்தை தாக்கல்செய்துள்ளேன் என்று சொன்னால் தவறு . வா.சா.ஆ.12 ஆன எனது வங்கிகணக்கு புத்தகத்தில் 06.08.2008 ம் தேதி இருபத்தி மூன்று லட்சத்தி ஐம்பதாயிரம் எனது கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்கள் 06.08.2008 ம்தேதிக்கு இரண்டு மாதங்களுக்கு முற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு . 06.08.2008 ம் தேதி எனது வங்கிக்கணக்கில் இருபத்தி மூன்று லட்சத்தி ஐம்பதாயிரம் ரூபாய் காட்டப்பட்டுள்ள பணம் பூர்வீக சொத்தை விற்று எனது பெயரில் போடப்பட்ட பணம் . கலியுகவர்தனுக்கு வங்கி கணக்கு இல்லாத காரணத்தினால் எனது பெயரில் போடப்பட்டது. அந்த பணம் கலியுகவர்தன் ராமசாமிக்கும் கணேசனுக்கும் விற்பனை செய்தது மூலம் வந்த பணம் தான். யாருமே கியைம் செய்து இரண்டு மாதங்கள் கழித்து கிரையம் தொகையை தரமாட்டார்கள் என்றும், எனது வங்கி கணக்கில் உள்ள பணம் கலியுகவர்தன் ராமசாமி மற்றும் கணேசனுக்கு கிரையம் செய்த வகையில் வந்த பணம் அல்ல என்றால் தவறு. நான் எனது மகனுக்கு அடிக்கடி பணம் தருவது வழக்கமா என்றால் செலவுக்கு பணம் தரமாட்டேன் . சொத்து வாங்குவதற்கு பணம் தருவேன் . எவ்வளவு என்னிடம் இருந்து என்றால் பூர்வீக சொத்தை விற்பனை செய்து வங்கி கணக்கில் பணம் இருந்த பணத்தை தவிர வேறு பணம் என்னிடம் இல்லை . பூர்வீக சொத்தை விற்பனை செய்து கிடைக்கப்பெற்ற பணத்தை எந்த தேதியில் எவ்வளவு பணம் வாங்கினேன் என்றால் 2008 ம் ஆண்டு இருபத்தி மூன்று லட்சம் கிடைத்தது . நான் தான் வங்கியில் செலுத்தினேன் . கணேசனும் ராமசாமியும் எனது மகனிடம் எந்த இடத்தில் வைத்து பணம்கொடுத்தார்கள் என்றும் அதை என் மகன் என்னிடம் கொடுத்தார் என்று எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான் . கணேசனும் ராமசாமியும் கிரையம் பெற்ற சொத்திற்கான கிரைய தொகையை

கலியுகவர்தனிடம் ரொக்கமாக கொடுத்தார் என்றால் வா .சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ. 5 ஆவணம் என்றால் சரிதான் . வா.சா.ஆ.4, 5 ஆவணங்களில் ராமசாமியும் மற்றும் கணேசனும கிரையத் தொகையை கலியுகவர்தனுக்கு ரொக்கமாக கண்டுள்ளது என்றும் அந்த கிரையத்தொகைகளும் மிககுறைவு என்றும், எனது வங்கி கணக்கில் இருபத்தி மூன்று லட்சத்தி ஐம்பதாயிரத்திற்கும் வா.சா.ஆ.4,5 கிரைய ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள ஆவணத்தற்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் நிறைய தொழில் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

(1,2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகேளுக்கு இணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

M DHANABAL Digitally signed by M DHANABAL Date: 2022.10.27 13:24:26 +0530

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்.

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**O.S.No. 874/2022**

**வா.சா. 1 மகுடீஸ்வரி** 18 .10.2022

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் பாகபிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் பாக பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ள பூமிகளுக்கான சர்வே எண் எனக்கு தெரியாது. நான் தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 6 ஏக்கர். தாவா சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான் . என்னுடன் சேர்த்து ஏழு பேர்கள் சேர்ந்து பாக வழக்கு தாக்கல்செய்துள்ளோம் . அமராவதி, வைத்தீஸ்வரி, கிருஷ்ணவேனி, அன்பழகன், சுப்புராஜ், தனலட்சுமி மற்றும்நான் ஆவோம். தனலட்சுமியைநான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது தாயார் காளியம்மாள் உயிரோடு இருந்து வருகிறார் அவரையும் நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது சகோதரி தனலட்சுமி எனது தாயார் காளியம்மாள் ஆகிய இருவரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காதத காரணத்தினாலும் இது பாக வழககு என்பதாலும் சேர்க்கவேண்டிய அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தினால் இந்த வழக்கு நிலைநிற்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல . எனக்கு திருமணம் ஆகி முப்பது ஆண்டு காலம் ஆகுது . பழனி அருகே உள்ள பச்சளம்நாயக்கன்பட்டியில் என்னை திருமணம் கொடுத்தார்கள் . முப்பது ஆண்டு காலமாக எனது கணவருடன் பச்சளம்நாயக்கன்பட்டியில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். கரட்டுபட்டியில் திருமணம் செய்து கொடுத்த அமராவதி, கிருஷ்ணவேனி ஆகிய இருவரும் திருமணம் நடைபெற்று முப்பது ஐந்து ஆண்டு காலம் இருக்கும் . எனது அக்கா அமராவதியின் கணவர் இறந்து முப்பது ஐந்து ஆண்டுகாலம் இருக்கும் அவர் தாவா சொத்தில் உள்ள வீட்டில் இருந்து வருகிறார். தாவா சொத்தில் அன்பழகன், காலிபொம்முராஜ் ஆகிய இருவரும் தனித்தனியாக வீடு கட்டியுள்ளார்கள் என்று சொன்னால் தவறு அந்த வீடுகள்எனது தகப்பனார் கட்டி வைத்த வீடு . அந்த இரண்டு வீடுகளிலும் அன்பழகனும் , காலிபொம்முராஜும் தனித்தனியாக வசித்து வருகிறார் என்றால் சரிதான் . ஆனால் அந்த வீடு எனது அப்பாவால் கட்டப்பட்ட வீடு . தாவா சொத்தில் அன்பழகன் மேற்கு பக்கத்தில் இருக்கிறார் என்றால் சரிதான் . காலிபொம்முராஜ் கீழ்பகுதி பாகத்தை சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான் . 1ம் வாதி சுப்புராஜ் மையப்பகுதியில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரிதான் . சுப்புராஜ், காலிபொம்முராஜ்மற்றும் அன்பழகன் தாவா சொத்தில் சுவாதீனத்தில்

இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் அவர்களும் இருக்கிறார்கள் எனது மூத்த சகோதரியும் இருக்கிறார் .மூத்த சகோதரி வீட்டில் இருந்து வருகிறார், மூன்று ஆண் மக்களும் விவசாய நிலங்களை சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான் .நான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லாத காரணத்தினால் தாவாவிற்கு நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணமும் தவறு என்று சொன்னால் சரியல்ல.2ம் வாதி அமராவதி கணவர் பெயர் என்னவென்று கேட்டால் பொன்ராஜ் என்றால் சரிதான்.

(1ம்பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்.

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**<u>O.S.No. 583/2022</u>**

**வா.சா.2.** கருப்புச்சாமி 18.10.2022

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் புரோட்நோட்டில் சாட்சி கையெழுத்து போட்டதால் நான் நீதிமன்றத்தில் சாட்சியம்அளிக்க வந்துள்ளேன். சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும்வரவில்லை . வாதி விஜயராணி கூப்பிட்டதன் பேரில் அவர் கேட்டுதன் பயனாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான் . எனக்கு சொந்த ஊர் நல்லூர்பட்டி. பிரதிவாதி செல்வனை எனக்கு தெரியும் . அவரும், நானும் ஒன்றாக படித்தவர்கள். செல்வனும், நானும் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளோம். புரோநோட்டை நான் எழுதினேனா அல்லது சாட்சிய கையெழுத்து மட்டுமே போட்டேனா என்றால் நான் சாட்சி கையெழுத்து செய்தேன். எனது தகப்பனார் பெயர் பழனிச்சாமி கவுண்டர். புரோநோட்டில் எழுதப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும் . புரோநோட்டை எழுதியது ஒட்டன்சத்திரத்தை சேர்ந்த ராமசாமி மகன் முருகன். 2018ம் ஆண்டு விஜயராணி வீட்டில்வைத்து புரோநோட்டில் கையெழுத்து செய்தேன். நான் தாவா புரோநோட்டில் கையெழுத்து செய்த போது அங்கு ஐந்து நபர்கள் இருந்தோம் . நான், முருகன், செல்வம், விஜயராணி மற்றும் அவரது கணவர் அப்பன் ஆகியோர்கள் இருந்தோம் . ஒரு லட்சம் ரூபாய் கடன் கொடுத்தது எனக்கு நேரடியாக தெரியும் . நான் சாட்சிகையெழுத்தை செய்த போது தான் அந்த பணத்தை கொடுத்தார்கள் . வாதி விஜயராணி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் அவர் எந்த தொழிலும் செய்யவில்லை அவரது கணவர் உரக்கடை வைத்துள்ளார் . விஜயராணி எப்படி எனக்கு பழக்கம் என்றால் விஜயராணியின் கணவர் கடையில் சாமான் வாங்கிவரும் போது விஜயராணியிடம் பேசுவது வழக்கம் . வா.சா.ஆ.1 புரோட் நோட்டில் நான் சாட்சி கையெழுத்து மட்டும்தான்செய்தேன். எனது முகவரி மற்றும் தந்தை பெயரை முருகன் தான் எழுதினார் . பொதுவாக ஒரு ஆவணத்தில் சாட்சி கையெழுத்து செய்யக்கூடிய நபர் அவரது முழுவிவரத்தையும் அவர்தான் எழுதுவார் என்று சொன்னால் சரிதான் . அந்த முழுவிவரம் எழுதினால்தான் அந்த நபர் யார் என்று தெரிய வரும் என்று சொன்னால் சரிதான் . நானும், பிரதிவாதி மற்றும் சாட்சிகள் ஆகிய அனைவரும் ஒரே பேனாவில் சாட்சி கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். அந்த பேனாவை முருகன்

தான் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் நான் கையெழுத்து செய்ததாக சொல்லப்படும் கடனுறுதி சீட்டு என்றால் சரிதான் . வா.சா.ஆ.1 புரோநோட்டில்எனது கையெழுத்து மட்டும்தான் போடப்பட்டுள்ளது எனது தகப்பனார் பெயர் குறிப்பிடவில்லை. ஆனால் ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது. நல்லூர்பட்டியில் கருப்பசாமி என்ற பெயரில் நிறைய பேர் இருப்பார்கள் என்று சொன்னால் சரிதான் . வா.சா.ஆ.1 புரோநோட்டில் சாட்சியாக கையெழுத்து செய்யப்பட்டுள்ள கருப்புச்சாமி நான் இல்லை என்றும் , அது வேறொரு கருப்புச்சாமி என்றும், நான் அந்த கையெழுத்தை என்னுடைய கையெழுத்து என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு . நான் வா .சா.ஆ.1 புரோநோட்டில் சாட்சி கையெபத்து செய்து இருந்தால் எனது தகப்பனார் பெயர் ,முகவரி, விலாசம் ஆகிய குறிப்பிட்டு எழுதியிருப்பேன் என்றும் நான் சாட்சி கையெழுத்தே செய்யாததால் தான் வா.சா.ஆ.1 புரோநோட்டில் மேற்கண்ட விவரங்கள் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல . தாவா புரோநோட்டில் தமிழிலும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்களை முருகன் தான் எழுதினார் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 புரோநோட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வாசகங்களை யார் சொல்லி எழுதியது என்றால் பிரதிவாதி செல்வம் சொல்லித்தான் எழுதியது. கருப்புச்சாமி நான் இல்லை என்றும், வா.சா.ஆ.1 குறிப்பிடப்பட்டுள்ள கருப்புச்சாமி வேறு ஒரு கருபபுச்சாமி என்றும் சாட்சியம் அளிக்க முன்வராததால் காரணத்தினால் கருப்புச்சாமி பெயருடைய நான் அது என்னுடைய கையெழுத்து என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . முறையாக பெயர், விலாசம் குறிப்பிடாமல் சாட்சியம் அளிக்கும் என்னுடைய சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்.

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**<u>O.S.No. 884/2022</u>**

**வா.சா.2.** கருப்பணன் 18.10.2022

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு நீதிமனறத்திலிருந்து சாட்சியம்அளிப்பதற்கு அழைப்பாணை வரவில்லை. வாதி அழைத்ததன் பேரில் அவருக்க ஆதவராக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான் .நான் மூன்றாம் வகுப்பு படித்துள்ளேன். நான் இதற்கு முன்பு புரோநோட் எழுதியதில்லை . வாதி முத்தப்பகவுண்டர் மீது வழக்கு தாக்கல்செய்யப்பட்டுள்ளது . முத்தப்பகவுண்டரின் தகப்பனார் பெயர் பழனியப்பகவுண்டர் . எனக்கு சொந்த ஊர் தேவச்சின்னாம்பட்டி , முத்தப்பகவுண்டர் நாகப்பன்பட்டியை சேர்ந்தவர். முத்தப்பகவுண்டரை எனக்கு எப்படி தெரியும்என்றால் அவர் எங்கள் ஊரில் பெண் கொடுத்துள்ளார் அந்த வகையில் முத்தப்பகவுண்டரை எனக்கு தெரியும்.புரோநோட் எழுதிய விவரத்தை யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் முத்தப்பகவுண்டர் விவரம் சொல்ல புரோநோட்டு எழுதப்பட்டுள்ளது. முத்தப்பகவுண்டர் இறந்துபோய்விட்டார். அவர் தாவா புரோட்நோட் எழுதிய ஆண்டின் கடைசி மாதத்தில் இறந்துவிட்டார். அவர் இறந்தபோது 90 வயது இருக்குமா என்றால் எனக்கு வயது தெரியாது. முத்தப்பகவுண்டர் இறந்தபோது அவருக்கு உத்தேசமாக 70 வயது இருக்கும் . முத்தப்பகவுண்டர் இறப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவர்கீழேவிழுந்து கால் ஒடிந்த விவரம் எனக்கு தெரியாது. முத்தப்பகவுண்டர் இறப்பதற்கு முன்புகால் ஒடிந்து வீட்டில்படுத்த படுக்கையாக இருந்து வந்தார் என்றும் அதனால் என்னுடன் வந்து வாதியிடம் கடன் வாங்கி இருக்க வாய்ப்பே இல்லை என்று சொன்னால் தவறு . பெரியசாமி தோட்டத்தில் வைத்து கடன்கொடுக்கப்பட்டது. கடன் கொடுத்த போது நான் , ரெங்கசாமி வேறு யாரும் இருந்து இருக்கலாம் எனக்கு ஞாபகம் இல்லை . சாட்சி ரெங்கசாமி நான் போவதற்கு முன்பே அங்கு இருந்தார். அவரை யார் அழைத்து வந்தது என்றால் முத்தப்பகவுண்டர் தான் கூட்டி வந்தார் . முத்தப்பகவுண்டரை எனது வண்டியில் உட்கார வைத்து அழைத்து சென்றேன். புரோ நோட்டில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் நான் தான் பூர்த்தி செய்து கையெழுத்து செய்தேன். வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள தமிழ் மற்றும் ஆங்கிலம் வருடத்தை நான் தான் எழுதினேன். வா.சா.ஆ.1 புரோநோட்டில் எந்த வருடம் நோட்டு அதில் அடித்தல் திருத்தம் எத்தனைஉள்ளது என்று

எனக்கு தெரியாது என்றால் சரிதான் .புரோநோட்டை எழுதி நான் கையெழுத்து செய்த வாதியிடம் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான் . அதன் பிறகு ரெங்காசமி , முத்தப்பகவுண்டன் ஆகியவர்கள் கையெழுதது செய்தார்கள் என்றால் சரிதான் . தாவா புரோநோட்டை எனது பேனாவில்தான் பூர்த்தி செய்தேன் . சாட்சி கையெழுத்தை செய்து ரெங்கசாமியும் முத்தப்பகவுண்டரும் வேறொரு பேனாவில் கையெழுத்து செய்தார்கள். ரெங்கசாமியின் ஊர் பெயர் , அப்பா பெயர் ஆகியவற்றை நான்தான் எழுதினேன் . வாதி பெரியசாமி எனது உறவினரா என்றால் இல்லை எனக்கு தெரிந்தவர் . அன்று இரண்டரை லட்சம் ரூபாய் கடன் கொடுத்தார். அனைத்தும் ஐநூறு ரூபாய் நோட்டுகள் . வாதி எனக்கு உறவினர் என்றும், முத்தப்பகவுண்டா வாதியிடம் கடனே வாங்கவில்லை என்றும் வாதியும் நானும் சேர்ந்து தாவா புரோநோட்டை உற்பத்தி செய்து வாதியால் இவ்வழக்கு தாக்கல்செய்யப்பட்டு அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு . முத்தப்பகவுண்டர் கையெழுத்து செய்த வகையில் அவர் அப்பா பெயர் எழுதினாரா இல்லையா என்று நான் கவனிக்கவில்லை ஆனால் அவர் கையெழுத்து செய்து ரேகை வைத்தார் . முத்தப்பகவுண்டர் படுத்த படுக்கையா இருந்தார் என்றும் அவருகது பணம் வாங்க வேண்டிய அவசியமே இல்லை என்றும் நோட்டு எழுதியதாக சொல்லப்படும் தேதியிலிருந்து ஆறு , ஏழு மாத காலத்திற்குள் இறந்துவிட்டதால் இரண்டரை லட்சம் ரூபாய் கடனை முத்தப்பகவுண்டர் வாங்கவில்லை என்று சொன்னால் தவறு . முத்தப்பகவுண்டர் கடனே வாங்கவில்லை என்றும் தாவா புரோநோட்டை எழுதிக்கொடுக்க வில்லை என்றும், வாதி யார் மீது வழக்கிட்டுள்ளார் என்ற விவரமே எனக்கு தெரியவில்லை என்று ம் அதன் காரணமாக எனது சாட்சி ஏற்க கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்.

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**<u>O.S.No. 63/2022</u>**

**வா.சா.1.** சங்கீதா 18.10.2022

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என் தகப்பனார் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் எனக்கு சரிபாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் என் தகப்பனாருக்கும், என் தகப்பனாரின் தகப்பனாருக்கும் பூர்வீக சொத்துக்கள் என்பதால் நான் இவ் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் நான் கூட்டு பாகஸ்தர் என்று குறிப்பிட்டுதான் இவ் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் தாத்தாவின் அப்பா பெயர் முத்து கவுண்டர் என்று சொன்னால் சரிதான் . முத்து கவுண்டரின் பழனியம்மாள் என்றால்சரிதான். முத்து கவுண்டர் மற்றும் பழனியம்மாள் ஆகியோருக்கு 2 ஆண்மக்கள் 1 பெண் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான் அவர்கள் முறையே கிட்டுச்சாமி , கந்தசாமி மற்றும் செல்லத்தாள் என்றால்சரிதான். என் தகப்பானரின் தகப்பனார் பெயர் கந்தசாமி என்றால் சரிதான். பாட்டி கருப்பாத்தாள் என்றால்சரிதான். எனது தாத்தா கந்தசாமிக்கு 1ம் பிரதிவாதி மற்றும் லங்கேஸ்வரி ஆகியோர் வாரிசு என்றால் சரிதான், என் தகப்பனாருக்கு தமிழரசி என்றால் சரிதான். எனது அம்மா என் தகப்பனாரை விட்டு சென்ற பின்பு என் தகப்பனார் ஈஸ்வரியை திருமணம் செய்து கொண்டார் சரிதான் என் தாயார் முறையாக விவாகரத்து பெறவில்லை. 2, 3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் மூலம் ஈஸ்வரிக்கு பிறந்த பிள்ளை என்றால் சரிதான் . ஆனால் எதிர் காலத்தில் எந்த ஒரு வம்பு வழக்கும் வரக்கூடாது என்ற காரணத்தினால் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளோம். 2, 3 பிரதிவாதிகளை எதிர் காலத்தில் எந்த பிரச்சனையும் ஏதும் ஏற்படகூடாது என்ற காரணத்தின் அடிப்படையில் அவர்களை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்ற விபரத்தினை என் பிராதில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 14 வரையிலான சொத்துக்கள் அப்பனூத்து கிராமததில் உள்ளது என்றால் சரிதான் . 15 வது இலக்க சொத்து பருத்தியூர் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் யாரால் சம்பாரிக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியும் தகப்பனை பெற்ற பாட்டனார் சம்பாரிக்கபட்டது. 12.08.1958, 20.07.1966, 10.07.1968, 30.10.1996 ஆகிய தேதிகளில் முத்து கவுண்டர் பெயரில் கிரையம் பெற்ற

சொத்துக்கள் தான் என்றால் சரிதான் . 08.07.1968. 30.12.1971, 27.06.1973. 15.07.1987. 29.08.2002 ஆகிய கிரைய பத்திரங்களும் கந்தசாமி மற்றும் கிட்டுச்சாமிபெயரில் கூட்டாக கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரிதான் ஆனால் அந்த கிரையங்கள் சுய சம்பாத்திய கிரையங்கள் அல்ல பூர்வீக சொத்தில் இருந்து வந்த வருமானத்தினை கொண்டு அந்த சொத்துக்கள் அவர்களால் கிரையம் பெறப்பட்டது . அந்த கிரையம் ஏற்படும்போது எனது தாயருக்கு திருமணம் நடைபெற வில்லை என்றும் நானும் பிறக்கவில்லை என்றும் நான் 1996 ல் பிறந்தேன் 2002 ல் ஏற்பட்ட கிரையம் எனக்கு தெரியும் . நான் பிறந்த தேதியை நிறுபணம் செய்வதற்கு எனது தரப்பில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முத்து கவுண்டர் இறந்த பின்பு எந்த ஒரு ஆவணமும் எழுதி வைக்காததால் கிட்டுச்சாமி , கந்தசாமி, செல்லாத்தாள் ஆகிய மூவரும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான் . முத்து கவுண்டர் இறப்பிற்கு முன்பும் , இறப்பிற்று பின்பும் கிட்டுச்சாமியும் கந்தசாமியும் அவர்கள் சுயமாக சம்பாதித்து அவர்கள் பெயரில் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் தவறு அந்த கிரையம் அனைத்தும் பூர்வீக சொத்துக்களில் உள்ள வருமானத்தினை கொண்டு பெறப்பட்டவை . முத்துகவுண்டர் இறந்த பின்னிட்டு தாவா சொத்துக்களுக்கு உண்டான பட்டா சிட்டா ஆகியவை கிட்டுச்சாமி, மற்றும் கந்தசாமி ஆகியோரின் பெயரில்தான் தாவா வழக்கு தாக்கல் செய்த வரை கூட்டாக இருந்தது என்றால் சரிதான் . வருவாய் துறை ஆவணங்களில் கிட்டுச்சாமி , கந்தசாமி பெயரில் கூட்டுப்பட்டா இருந்ததாலும் தனித்த சுவாதீனம் இருந்ததாலும் தாவா சொத்துக்களள் முழுவதும் கிட்டுச்சாமி , கந்தசாமி ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல . முத்து கவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு 03.01.2011 ல் வாசாஆ 1 ஆவணத்தின் மூலம் கிட்டுச்சாமியும் கந்தசாமியும் பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்று சொன்னால் தவறு , முத்துகவுண்டரின் வாரிசுகள் அனைவரும் கையொப்பம் செய்துள்ளார்கள். வாசாஆ 1 பாகபத்திரத்தில் தாவா சொத்து எவ்வாறு ஆர்ஜிதம் செய்யப்பட்டது, தனிப்பட்ட சொத்தா, பூர்வீக சொத்தா ஆகிய விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு . வாசாஆ 1 பாக பத்திரத்தில் கிட்டுச்சாமி, கந்தசாமிதான் அந்த சொத்துக்களில் உண்மையான உரிமையாளர்கள் என்றும் கிட்டுச்சாமியின் 2 ஆண்மக்களும், கந்தசாமியின் மகனான 1ம் பிரதிவாதி ரெத்தினசாமியும் பெயர் அளவிலான தரப்பினராக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல . கிட்டுச்சாமி மக்களுக்கும், கந்தசாமியின் மகனுக்கும் , அன்பினாலும், அவர்கள் மீது உள்ள பிரியத்தினாலும் சொத்து கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல . நானும் எனது தாயாரும் சேர்ந்து கொடுத்த வழக்கு முன் அறிவிப்பான

வாசாஆ 2ல் எனது தாயாருக்கும் எனக்கும் வாழ்க்கை உதவி கோரி தான் அறிவிப்பு அனுப்பி இருந்தோம் என்றால் சரிதான் . 1ம் பிரதிவாதி அதற்கு பதில் அறிவிப்பு கொடுத்து இருந்தால் சரிதான் . வாசாஆ 4ல் பதில் அறிவிப்பில் சொன்ன சங்கதிகள் எனக்கு தெரியும் என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை . நானும் என் தாயாரும் கொடுத்த வாசாஆ 5 மறு பதில் அறிவிப்பில் பாக பிரிவினை கோரி அனுப்பி இருந்தோம் என்றால் சரிதான் . வாசாஆ 9 பதில் அறிவிப்பினை பாக பிரிவினைக்கு எதிராக 1ம் பிரதிவாதியால் பதில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 17.11.1998 ம் ஆண்டு என் தாயார் என் தகப்பனாருக்கு ஜீவனாம்ச பாத்திய விடுதலை பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டது என்றால் எனது தகப்பனார் என் தாயாரருக்கு தெரியாமல் , மோசடி செய்து என் தகப்பனார் எழுதி பெற்றுகொண்டார் . எனது தாத்தா கந்தசாமி என் தாயாருக்கு ஒரு சொத்தினை கிரையம் எழுதி கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 12.07.2000 தேதி எனது தாயார் ஒரு கருப்புச்சாமிக்கு கிரையம் செய்தார் என்றால் எனக்கு தெரியாது . எனது தாயார் 25000 ரொக்கம் பெற்று கொண்டுதான் எழுதிகொடுத்து இருந்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது . தாவா சொத்துக்கள் என் தகப்பனாரால் சம்பாரிக்கப்படவில்லை என்றும் என் தகப்பானரை பெற்ற முப்பாட்டனார் சம்பாரிக்கப்பட்டது என்றும் முத்து கவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு அவரது 2 பிள்ளைகளும் வாரிசு என்கிற முறையில் பிதுராஜ்யம் அடிப்படையில் கிடைக்கப்பட்டு அனுபவித்தார்கள் என்றால் சரிதான் . கிட்டுசாமியிம் கந்தசாமியும் அவர்களது ஆண்வாரிசுகளும் வாசாஆ 1 பாக பிரிவினை மூலம் பாக பிரிவினை செய்து கொண்டதால் கந்தசாமிக்கும் , கிட்டுச்சாமிக்கும் தனித்த சொத்துக்கள் என்றால் தவறு . தாவா சொத்துக்களில் எந்த ஒரு வழியிலும் எனக்கு பாகம் கிடைக்காது என்று சொன்னால் சரியல்ல , பிறப்பால் ரத்தினசாமியின் வாரிசி என்ற அடிப்படையில் தாவா சொத்தில் நான் பாக பிரிவினை கோருவதற்று உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல , தாவா சொத்துக்களில் நான் கூட்டு அனுபவதில் இருந்து வருவதற்கு யாதொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அதற்கான ஆவணம்என்னிடம் இல்லை . வாசாஆ 2 மற்றும் 4 அறிவிப்பில் குறிப்பிட்டுள் சங்கதிகளுக்கு முரன் பட்டு என் பிராது அமைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவாவிற்று வழக்கு மூலமே எழ வில்லை என்று சொன்னால் சரியல்ல . அதனால் தாவாவில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றும் என் தாவாவினை அதிக படியான செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்.

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No. 75 /2022**

**வா.சா.4.** பாலகிருஷ்ணன் 18.10.2022

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் வாதி லட்சுமிக்கு நான் மாமன் முறை என்றால் சரிதான் . வாசாஆ 2 ஆவணத்தில் நானும் தரப்பினராக இருந்து கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான் . நாகனம்பட்டியில் சர்வே எண் 20/4 ல் எனக்கும் பிரதிவாதிகளுக்கும் சொத்து உள்ளது என்று சொன்னால் சரிதான் . மேற்படி சர்வே எண் 20/4 ல் மொத்த விஸ்தீரனம் 84 சென்ட்ல் தற்கால உட்பிரிவின் படி சர்வே என் 20/4 பி ல் பிரதிவாதிகளுக்கு 54 சென்ட் நிலங்களுக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த 84 சென்ட் நிலத்தில் பகுதி அளவு நிலம் நான் உரிமைகோருகிறேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கும் எனக்கும் சர்வே எண் 20/4 சம்மந்தமாக நிலன பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான் ,. ஆகையால் எங்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே பேச்சு வார்த்தை இல்லை என்று சொன்னால் சரிதான் மீனாட்சியும் தெய்வநாயகமும் பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதி கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தற்கு பின்னிட்டு பிரதிவாதிகள் தான் தனிப்பட்ட அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் இல்லை 2 பேரும் அனுபவதித்து வருகிறார்கள் ., அந்த சொத்தில் இருந்து தான் வாதிகள் பாகம் பிரித்து தனி சுவாதினம் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் சரிதான் . தெய்வநாயம் உயில் சாசனம் எழுதும்போது என்னை வைத்து எழுதவில்லை என்று சொன்னால் சரிதான் . ஆனால் என்னிடம் உயில் எழுதி வைத்ததாக சொல்லி உள்ளார் அந்த விபரம் வாதிகள் தான் எனக்கு சொன்னார் என்றால் சரிதான். மீனாட்சிக்கும் தெய்வநாயத்திற்கும் ஏற்பட்ட பாக சொத்துக்களை பொருத்து பிரதிவாதிகளுக்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்த பின்னால் தெய்வநாயகத்தினால் உயில் சாசனம் எழுத முடியாது என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது . பாகபாத்திய

விடுதலை ஆவணம் உரிய மறுபயன் அடிப்படையில் பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுக்கப்பட்டது என்றும் மோசடியாக எழுதி வாங்கியதாக நான் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல . பிரதிவாதிகளுடன் இடம் சம்மந்தமான பிரச்சனையின் காரணமாகத்தான் வாதிகளுடன் சேர்ந்து பிரதிவாதிகளுக்கு எதிரிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல . சாட்சி சொல்வதற்கு வாதிகள் தான் என்னை அழைத்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.
<u>O.S.No. 13 /2022</u>

பி.வா.சா.1 பழனிச்சாமி 18.10.2022

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாதிதரப்பில் தாக்கல் செய்துள்ள எல்லா ஆவணங்களையும் நான் படித்து பார்த்தேன் . முத்தப்ப கவுண்டரை எனக்கு தெரியும் . முத்தப்பகவுண்டருக்கும் கருப்புசாமிகவுண்டருக்கும் என்ன சம்மந்தம் என்றால் அப்பனும் மகனும் உறவு . அவர்களுக்குள் பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் முத்தப்பகவுண்டர் பாக பிரிவினை செய்துகொள்ளவில்லை, கருப்புசாமியும் அவரது தம்பியும் பாகபிரிவினை செய்து கொண்டார்கள் . முத்தப்பகவுண்டரின் தகப்பனார்பெயர் முத்தப்பகவுண்டர்தான், 1975 ம் ஆண்டு பாக பிரிவினை பத்திரத்தில் முத்தப்பகவுண்டர் மகன் முத்தப்பகவுண்டருக்கு பாகம் ஒதுக்கப்படவில்லைஎன்று சொன்னால் சரியல்ல . அந்த பத்திரத்தினை நான் முழுதுமாக படித்து பார்த்தேன் . வாசாஆ 4 பாகபிரிவினை ஆவணத்தில் 7 வது பக்கத்தில் சர்வே எண் 368/1 ல் 50 சென்ட் நிலத்தில் அதில் உள்ள செரஸ்து கிணரு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான் . அதில் 4ல் 1 பங்கு உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது . அந்த பத்திரம் அவர்களால் ஏற்படுத்தி கொண்டது . 1975ம் ஆண்டு பாகபத்திரத்தினை செல்லாது என்று அறிவிக்க கோரி எந்த நடவடிக்கையும் எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன் . என்ன நடவடிக்கை எடுத்துள்ளேன் என்பதை நிருபணம் செய்வதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல . வாசாஆ 4ல் பாக பிரிவினை பத்திரத்தில் 1ம் வாதிக்கு பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அந்த பத்திர விபரம் எனக்கு தெரியும் என்றும் அதை செல்லாது என்று சொல்லி நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல . 2ம் வாதி முத்துமணி எனக்கு தெரியும் என்று சொன்னால் தெரியும் . அவர் இந்த வழக்கு சம்மந்தமாக 2009 ம் ஆண்டு கிரையம் பெற்றுள்ள விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் எனக்கு தெரியும் . அதன் காரணமாக அவர் ஒரு திருத்தல் மனு தாக்கல் செய்து அவரது பாக பிரிவினையை அதிக படுத்தி கொண்டார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது . வழக்கு

சொத்தில் பழனியப்பகவுண்டர் உறவு முறை விஜயலட்சுமி தாவா சொத்தில் உரிமை இல்லை என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தாவா சொத்து விஜயலட்சுமிக்கு எந்த உரிமையும் இல்லை என்ற விபரம் எனக்கு தெரியும். முத்துமணி கருப்பாயம்மாளிடம் இருந்து 2015 ல் கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால்அது பற்றி எனக்கு தெரியாது . வழக்கு சம்மந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் படித்து பார்த்தேன் என்று சொல்லிவிட்டு தற்போது வழக்கிற்காக ஆவணங்களை பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல . 3ம் பிரதிவாதி கந்தசாமிக்கும் வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என்று சொன்னால் சரிதான். விஜயலட்சுமி 2ம் வாதி முத்துமணிக்கு கிரையம் கொடுத்த கிரைய பத்திரத்தினை செல்லாது என்று அறிவிக்க கோரி எந்த நடிவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான் ஆனால் நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளேன். அந்த பத்திரத்தினை படித்து பார்த்துள்ளேன். வாசாஆ 5 பத்திரத்திலும் 2ம் வாதிக்கு சர்வே எண் 358/1 ல் சென்ட் 50 ல் 4ல் 1பங்கு பாத்தியம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான் . வழக்கு சம்மந்தமாக எனக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என சொல்லும் நான் ஏதேனும் ஆவணத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்துள்ளேன். வீட்டுவரி ரசீது , மின் இனைப்பு பெற்றதற்கான உத்தரவு, ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேன் . நான் கட்டியுள்ள வீடு தாவா சொத்தில் 2 சென்ட் கீழ் குறைவாக உள்ளது என்றும் வழக்கிற்காக வழக்கு சொத்து முழுவதும் எனக்கு வீடு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வீட்டின் விஸ்தீரனத்தினை காட்டுவதற்கான எந்த ஒரு ஆவணத்தினை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கிணறு ஆழம் 60 அடி இருக்கும் சுற்றளவு 40 அடி இருக்கும். கிணற்று அளவு சம்மந்தமாக எனது எதிர் வழக்குரையில் எந்த விபரமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல . நான் தாக்கல் செய்துள்ள பிவாசா 3 சிட்டா 31.01.2013 என குறிப்பிடப்பட்டுள்ளதால் வழக்கிற்கு பின்னிட்டு என்னால் தாவாவிற்காக பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கில் கிணறு மற்றும் வீடும் மொத்தம் 4 சென்ட் உள் தான் இருக்கும் என்றும் வழக்கு சொத்து மீதம் உள்ள 46 சென்ட்யையும் எந்த ஆவணமும் இல்லாமல் அபகரிக்க பார்க்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் வாதிக்கு எதிரிராக நான் கொடுத்த புகார் உண்மை தன்மை இல்லாத காரனணத்தினால் போலிசார் எந்த நடிவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல . 1ம் பிரதிவாதி கருப்பணகவுண்டர்வகையிராவிற்கு எந்த பாக பிரிவினையும் நடக்கவில்லை என குறிப்பிட்டுள்ளேன் அதற்கு உண்டான எந்த

ஆவணத்தினை நான் தாக்க செய்ய வில்லை என்று சொன்னால் சரியல்ல. 1956 ம் ஆண்டு செட்டில் மென்ட் நில பதிவேட்டில் எனது பெயருக்கு உரிமை மூலம் ஆவணம் வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை . தாவா சொத்துக்குண்டான 1956 ம் ஆண்டு செட்டில் மென்ட் நில பதிவேட்டின் ஆவணத்தினை நான் தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பில் எந்ததனை சென்ட் பாத்தியம் உள்ளது என எந்த ஆவணத்தினையும்தாக்கல் செய்யாத நான் பொய்யா உரிமை உள்ளதாக குறிப்பிட்டு பொய் சாட்சியம் அளித்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல . வாசாஆ 4, 5 ஆவணங்களை செல்லாது என்றும் வழக்கு சொத்துகக்களில் எனக்கு எத்தனை சென்ட் நிலம் பாத்தியம் உள்ளது என்று சொல்லி நான் எதிர் கோரிக்கை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ 4 படி 1 ம் வாதிக்கு 12 1/2 சென்ட் நிலமும் வாசாஆ 5 ஆவணத்தின் படி 2 ம் வாதிக்கு 12 1/2 சென்ட் நிலம் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல . 26.08.2015 ம் தேதி 2 ம் வாதி தாவா சொத்தில் ஒருபகுதியை மீண்டும் கிரையம் பாத்தியப்பட்டது என்று சொன்னால் வழக்கு சொத்தில் பாத்தியம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதனால் தாவா படி வாதிகளுக்கு பாத்தியம் கிடைக்ககூடியது என்று சொன்னால் சரியல்ல.

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.
**O.S.No. 24 /2022**

பி.வா.சா.2. கந்தசாமி 18.10.2022

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் திண்டுக்கல் மேற்கு வட்டம் புளியமரத்துகோட்டையை சேர்ந்தவன் என்றால் சரிதான் . 1ம் பிரதிவாதி செல்லமுத்துவும் , வாதிகளும் சிந்தலப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான் 1ம் பிரதிவாதி செல்லமுத்து எனக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரியல்ல. அவருக்கும் எனக்கும் 25 ஆண்டுகள் பழக்கம் , எனக்கும் அவருக்கும்கொடுக்கல் வாங்கல் உள்ளது என்றால் சரிதான் . வழக்கு சொத்து காப்பிளியபட்டி கிராமத்தில் உள்ளது அதனால் எனக்கு வழக்கு சொத்து குறித்த விபரங்கள் ஏதும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல . தாவா சொத்துக்கும் எனக்கும் 10, 15 கி,மீ தூரம் உள்ளதால் எனக்கு அடிக்கடி போக்குவரத்து உண்டு அதனால் தாவா சொத்து பற்றி எனக்கு தெரியும். பொதுவாக ஒரு நபர் கடன் பெற்றால் கடனுறுதி சீட்டு தான் எழுதி கொடுப்பார்கள் என்றால் புரோநோட்டும் எழுதுவார்கள் அதிகார முகவர் பத்திரமும் எழுதுவார்கள் , அந்த அதிகார பத்திரத்தில் கடன் என்று குறிப்பிட்டுத்தான் எழுதுவார்கள் என்று சொன்னால் அதில் பணம் பெற்ற விபரத்தினை குறிப்பிடமாட்டார்கள். அதிகார முகவர் பத்திரத்தினை நான் யாருக்கும்எழுதி கொடுக்கவில்லை , 1ம் பிரதிவாதி ஒரு செல்லமுத்துவிற்று எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தினை நான் படித்து பார்த்துள்ளேன். அந்த பொது அதிகார பத்திரத்தில் கடன் பற்றி எந்த விபரத்தினை குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான் . வழக்கு சொத்தில் பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்று சொன்னால் இல்லை வாதி பெயரில் மாற்றப்பட்டுள்ளது . நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்தில் உள்ள விபரத்தினை நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான் . 1ம் பிரதிவாதி அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்க வேண்டும் என்று அழைத்ததால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல . தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி கரும்பு பயிர்இட்டுள்ளதாக நான் குறிப்பிட்டுள்ளதற்கு எந்த ஆவணத்தினை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல அமராவதி சக்கரைஆலையுடன் 1ம் பிரதிவாதி கரும்பு பயிர் இடுவதற்கு ஒப்பந்தம் செய்துள்ள ஆவணத்தினை நான் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்று சொன்னால் சரிதான் . 1ம் பிரதிவாதி செல்லமுத்துவிற்கும் அவரது மகள் சரண்யாவிற்கும் பாத்தியம் உள்ளது என்று சொன்னால் சரிதான் . 1ம் பிரதிவாதி ஒரு பொது அதிகார முகவருக்கு 2 ஏக்கர் 4 சென்ட் நிலத்தில் 3ல் 1 பங்கு நிலத்தினை அதிகார ஆவணத்தின் மூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான் . இந்தவழக்கு சொத்து குறித்து எதுவும் தெரியாமல் 1ம் பிரதிவாதி செல்லமுத்து கேட்டு கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல . 1ம் பிரதிவாதி ஒரு செல்லமுத்துவிற்கு ஒரு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுக்கும் போது நான் உடன் இருந்தேன் ஆனால் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. வாசாஆ 1 மற்றும் 4 பொது அதிகார ஆவணம் எழுதி கொடுக்கும்போது நான் உடன் இருந்ததாக 1ம் பிரதிவாதி அவர் சொல்லி யுள்ள எதிர் வழக்குரையில் சொல்லவில்லைஎன்றும் , நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றும்நான் உடன் இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**O.S.No. /2022**

**பி.வா.சா.** 18.10.2022

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**